
## குறைவே இல்லாத வருமானம்... கொடையாக வரும் உற்சாகம்...

## 10.02.2013



**போலீஸ் இன்ஸ்பெக்டரின் சம்பங்கி சாகுபடி!**

எல்லாருடைய வாழ்க்கையுமே இயந்திரமயமாகிவிட்டதால், எதையோ தொலைத்த உணர்வு... எல்லா மனிதர்குள்ளேயும் இருக்கு. அதனால்தான் வாழ்க்கையை ரசித்து வாழணும் என்று எவ்வளவு போராடினாலும், பலருக்கும் அது கைகூடுவதேயில்லை. அரசுப் பணியில் இருந்தாலும், பரம்பரைத் தொழிலான விவசாயத்தை நான் திரும்பவும் கையிலெடுத்த பிறகுதான், எனக்கு வாழ்க்கை திருப்தியாக இருக்கிறது என்கிறார், கரூர் மாவட்டம், க.பரமத்தி, வேட்டையார் பாளையம் கிராமத்தில் விவசாயம் செய்து வரும், மனோகரன். இவர், தமிழக காவல் துறையில் ஆய்வாளராக பணியாற்றிக் கொண்டிருப்பவர்.

காவல் துறையிலிருந்து கழனிக்கு!

விவசாயம் எங்களுக்கு பரம்பரைத் தொழில். எனக்கு போலீஸ் டிபார்மெண்டில் வேலை கிடைத்ததால் விவசாயத்தை விட்டுப் போயிட்டேன். அப்பாவுக்குப் பிறகு, விவசாயம் செய்து ஜெயிக்க முடியும் என்ற நம்பிக்கையும் இல்லை. அதனால், நிலத்தை சும்மாதான் போட்டு வைத்திருந்தேன். கிட்டத்தட்ட முப்பத்தைந்து வருடம் போலீஸ் வேலை செய்த பிறகு, இப்போதுதான் எனக்கு விவசாயத்திலும் ஜெயிக்க முடியும் என்று நம்பிக்கை வந்திருக்கிறது. அதற்கு காரணம் பசுமை விகடன் தான். இதைப் படிக்க ஆரம்பித்துவிட்டுதான் நம்பிக்கையோடு நிலத்தில் கால் வைத்திருக்கிறேன். விவசாயத் தொழிலில் கிடைக்கும் திருப்தி.. வேறு எதிலும் கிடைப்பதில்லை.

**பாதை காட்டிய பசுமை விகடன்!**

'வானகம்' பண்ணையில் நம்மாழ்வார் ஐயாவிடம் இரண்டு நாள் பயிற்சி எடுத்துக் கொண்டேன். அதே போல், சுபாஷ் பாலேக்கர் ஐயாவுடைய ஜீரோ பட்ஜெட் பயிற்சி வகுப்பிலும் கலந்துகொண்டேன். பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் இயற்கை வழி வேளாண்மை படிப்பும் படித்தேன். இந்த மூன்றையும் எனக்கு அறிமுகப் படுத்தியது, பசுமை விகடன்தான். பயிற்சி எடுத்து கொண்ட பிறகு, ஜீவாமிர்தம் தயாரிப்பதற்காக நாட்டு பசு ஒன்று வாங்கியிருக்கிறேன்.

திண்டுக்கல், தவசிமடையைச் சேர்ந்த இன்ஜினீயர் மருதமுத்து பற்றியும் பசுமை விகடனில் ஒரு செய்தி வந்திருந்தது. 60 சென்டில் வருடத்திற்கு இரண்டரை லட்சம் வருமானம் பார்க்கிறார் என்று படித்ததும் ஆச்சரியப்பட்டு அவரிடம் போனில் பேசினேன். அவர் நேரில் வந்து ஆலோசனை கொடுத்ததுடன், 250 கிலோ விதை கிழங்கையும் கொடுத்தார். அவர் சொன்னபடி, 70 சென்ட் நிலத்தில் சம்பங்கி நடவு செய்ய

ஆரம்பித்தேன். இந்த மண்ணில் சம்பங்கி வராது என்று பலரும் கருத்து சொன்னாங்க. நான் எதற்கும் கவலைப்படாமல் நடவு செய்தேன். இப்ப பாருங்க… சும்மா தளதள என்று வளர்ந்து நிற்கிறது சம்பங்கி என்றார்.

இப்போது சராசரியாக தினமும் 5 கிலோ அளவிற்கு பூ வருகிறது. இன்னும் போகப் போக அதிகமாகும். கரூர் பூ மார்க்கெட்டிற்குத்தான் அனுப்பிக் கொண்டிருக்கிறேன். அதனால் தினசரி வருமானம் கிடைக்கிறது. பனிக்காலத்தில் மட்டும் பூ விளைச்சல் குறையும். மற்றபடி சம்பங்கி வளர்ப்பது, வங்கியில் பணத்தைப் போட்டு வைத்த மாதிரிதான்.

மொத்தம் 6 ஏக்கர் நிலம் இருக்கு. அதில், சம்பங்கி நடவு செய்தது போக மீதி இடங்களில் பெருநெல்லி, முருங்கை, எலுமிச்சை, மல்லி, மலைவேம்பு, செஞ்சந்தனம், வாழை, மா, கொய்யா, தீக்குச்சி மரம், தேக்கு, பப்பாளி, நாவல், கறிவேப்பிலை, தென்னை, பனை, ஊஞ்ச மரம் என்று வைத்திருக்கிறேன். எந்த இடத்தையும் சும்மா போட்டு வைப்பதில்லை.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று சொல்லும் மாதிரி, என்னைப் போல் மற்றவர்களும் கத்துக்க வேண்டும் என்று, என் கிராமத்தைச் சுற்றி இருக்கும் ஐந்து நூலகங்களுக்கு ஆண்டு சந்தா கட்டலாம் என்றிருக்கிறேன். எங்க பகுதியில் ஆட்கள் கிடைப்பது கடினமாக இருக்கிறது. எனக்கும், வேலையில் இருந்து கொண்டே விவசாயத்தைப் பார்ப்பது சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனாலும், விவசாயத்திலும் எனக்கு மன அமைதி கிடைக்கிறது என்றார்.

இப்படித்தான் சாகுபடி செய்யணும் …

சம்பங்கியை பனிக்காலத்தைத் தவிர மற்ற அனைத்து மாதங்களிலும் நடவு செய்யலாம். 70 சென்ட் நிலத்தில் 5 டிராக்டர் தொழுவுரத்தைக் கொட்டி, கட்டியில்லாத அளவிற்கு இரண்டு மூன்று உழவு செய்ய வேண்டும். பிறகு, 3 அடி அகலம், அரை அடி உயரத்திற்கு நீளமான பார்களை அமைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாருக்கும் இடையில் அரை அடி இடைவெளி இருக்க வேண்டும். சொட்டுநீர், தெளிப்பு நீர்ப் பாசனம், செய்பவர்கள் பாரின் மேல், குழாய்களை அமைத்துக் கொள்ளலாம். வாய்க்கால் பாசனம் செய்பவர்கள் அரை அடி (பாருக்கு பார் உள்ள இடைவெளி) இடைவெளயில் உள்ள வாய்க்கால் மூலமாக பாசனம் செய்யலாம். பாரின் இரண்டு ஓரங்களிலும் ஒன்றரை அடி இடைவெளியில் ஆழமாகக் குழி பறித்து … விதைக்கிழங்கை வைத்து மூட வேண்டும். தண்ணீர் தேங்கி நிற்காத வகையில் … மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து, தேவைக்கேற்ப பாசனம் செய்து வந்தால் போதுமானது. அவ்வப்போது களைகளை அகற்ற வேண்டும். பயிருக்கு ஊட்டம் தேவைப்படும்போது, ஜீவாமிர்தம், பஞ்சகவ்யா ஆகியவற்றில் ஏதாவதொன்றை பாசனத்துடனோ, இலை வழித்தெளிப்பாகவோ தரலாம். செடிகளுக்கு மூடாக்கு போட்டு விட்டால், தண்ணீர் தேவை குறைவதோடு களைகளும் மண்டாது. ஆறாவது மாதத்தில் இருந்து, மகசூல் எடுக்கலாம். தொடர்ந்து, மூன்று வருடம் விளைச்சல் கொடுத்துக்கொண்டே இருக்கும். அதற்குப் பிறகு, புதுங்கிழங்கு நடவு செய்து திரும்பவும் மகசூல் எடுக்கலாம் என்கிறார் மனோகரன்.

---


தொடர்புக்கு

**பி.மனோகரன், செல்போன் : 94874 – 55156**



**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.02.13 www.vikatan.com**